(இ) திருவாரூர், திருக்காட்டுப்பள்ளி ஆகிய இடங்களில் சிறு சிறப்பங்காடிகள் ஏற்படுத்தும் செயற் குறிப்பு பரிசீலனையில் உள்ளது. நாகப்பட்டினத்தில் ஒரு சிறு சிறப்பங்காடி திறக்க நிதியுதவி அனுமதிக்கப்பட்டுள்ளது. பட்டுக்கோட்டையில் ஒரு சிறப்பங்காடி திறக்கப்பட்டுவிட்டது.

கைதிகளுக்கு செய்தித்தாள்கள் வழங்கல்.

* 622 வினா : டாக்டர் எச். வி. ஹாண்டே : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறைச்சாலையில் உள்ள கைதிகளுக்கு செய்தித்தாள்கள், வார, மாத இதழ்கள் வழங்கப்படுகின்றனவா ?

(இ) ஆமெனில், அதன் விபரங்கள் யாவை ?

(உ) தென்னகம், சமநீதி போன்ற எதிர்க்கட்சி பத்திரிகைகளும் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) "சி" பிரிவு கைதிகளுக்கு ஒவ்வொரு 100 பேருக்கும் அல்லது அதில் மீதமுள்ள பகுதியினருக்கும் கீழ்கண்ட தினசரி தாள்களில் ஏதேனும் ஒன்று வீதம் அரசு செலவில் வழங்கப்பட்டு வருகின்றது.

1. தினமணி (தமிழ்)
2. நவமணி (தமிழ்)
3. தினத்தந்தி (தமிழ்)

கைதிகளிடையே பாகுபாடின்றி ஒவ்வொரு 200 பேருக்கும் அல்லது அதில் மீதமுள்ள பகுதியினருக்கும் கீழ்கண்ட வார, மாதமிருமுறை, மாத இதழ்களில் ஏதேனும் ஒரு இதழ் வீதம் அரசு செலவில் வழங்கப படுகின்றது.

1. ஹோவார்ட் ஜர்னல்
2. சித்திரகுப்தா
3. பாரத்
4. கல்கி

TAMIL NADU LEGISLATURE LIBRARY
24 OCT 1975
MADRAS

5. ஆனந்தவிகடன்
6. விநோதன்
7. மாத்ரு பூமி
8. சகோதரம்
9. சுபோதா
10. சரஸ்வத்
11. ஜதீத் தில் சேஸ்ப்

(உ) இப்போது செயற்குறிப்பு எதும் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த கைதிகளுக்கு என்னென்ன பத்திரிகைகள் கொடுக்க வேண்டுமென்று பிரிட்டீஷ் காலத்தில் போட்டிருந்தார்கள். அதே முறைதான் இப்போதும் பின்பற்றப்பட்டு வருவதாகத் தெரிகிறது. ஏனென்றால் அமைச்சரவர்கள் படித்த பட்டியலைப் பார்த்தால் ரொம்ப காலத்திற்கு முன்னால் போட்ட பட்டியல் மாதிரி இருக்கிறது. அவர்கள் சொன்ன பத்திரிகைகளில் சில வாரப்பத்திரிகைகள் நடக்கிறதா என்று கூடத் தெரியவில்லை. ஆகையால் இப்போது இருக்கிற சில நாளிதழ்களை குறிப்பாக சில கட்சிப் பத்திரிகைகளைக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எல்லாம் கன்னடம், உருது பத்திரிகைகளாக இருக்கின்றன. அதனால் பெயர் கூட கஷ்டமாக இருக்கிறது. கட்சிப் பத்திரிகைகளைப் பொறுத்தவரையில் அந்தந்த கைதிகள் சொந்த செலவில் வாங்கிப் படிக்க விரும்பினால் அதற்கு ஒரு பட்டியல் இருக்கிறது. அதிலுள்ள பத்திரிகைகளை வாங்கிப் படிக்கலாம்.

திரு. ஆலடி அருணா : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கைதிகள் படிக்கின்ற பத்திரிகைகள் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதில் தென்னகம், மக்கள் குரல் போன்ற பத்திரிகைகள் இடம் பெறவில்லை. அத்தகைய பத்திரிகைகளையும் கைதிகள் படிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசாங்க செலவில் இல்லை.

திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களே, கைதிகளாக இருப்பவர்களுக்கு பத்திரிகைகள் வழங்குவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அவர்கள் படிக்கும்போது அந்தப்பெயர்கள் அவர்களுக்கும் விளங்கவில்லை; நமக்கும் விளங்கவில்லை. ஆகவே, தமிழ் நாட்டிலுள்ள கைதிகளுக்கு தமிழ் பத்திரிகைகள் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ் இதழ் பற்றியும் வாசித்தேன். அதை புரிந்திருப்பார்கள். மலேயாளம், கன்னடம், உருது பத்திரிகைகளும் வழங்கப்படுகின்றன. அப்படிப்பட்ட மொழி படித்தவர்களாக இருந்தால் அதை மறுக்க முடியாது.

திரு. எம் சுரேந்திரன் : சார், பல பத்திரிகைகளேப்பற்றி அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்த பத்திரிகைகள் வாங்கப்படுகின்றன என்பதைத் தவிர அவர்கள் படிப்பதற்குப் போதுமான நேரம் அளிக்கப்படுகிறதா? அதே நேரத்தில் இந்தக் கைதிகள் தனியாக வாங்கி படிக்க அனுமதிக்கப் படும் என்றும் சொன்னார்கள். பாதுகாப்புக்கைதிகளாக இருப்பவர்கள் தவிர மற்றவர்களுக்குள் பணம் வைத்து வாங்கும் முறை இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவர்களே விரும்பினால் அவர்கள் செலவில் வாங்கிக்கொள்ள அனுமதிக்கிறோம்.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, பத்திரிகைகளேப்பற்றி சொன்னார்கள். கைதிகள் படிப்பதற்கு புத்தகங்கள் கேட்டால் கொடுக்கப் படுகிறதா? குறிப்பாக, மத சார்பான நூல்கள், குரான், பைபில், இதிகாசங்கள் போன்றவைகளேக் கேட்டால் அப்படிப்பட்ட புத்தகங்களேக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :—ஒரு முறை அவர்கள் சிறைக்குச் சென்று வரவேண்டும். சென்று பார்த்து வந்தால் பல சிறைகளில் இந்த அரிய வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது தெரியும். கைதிகளில் பலர் அங்கிருக்கிற நூலகங்களில் படித்து, தேர்வுகளில் பட்டம் பெறும் வாய்ப்பும் இருக்கிறது.

திரு. கே. ஆர். கிருஷ்ணன் : தலைவரவர்களே, ஏற்கனவே வழங்கப் படும் பத்திரிகைகளிலுள்ள முக்கியமான செய்திகளே மையிட்டு மறைத்துக் கொடுக்கிறார்கள். அதனால் சரியாக செய்திகளே அவர்கள் தெரிந்துக் கொள்ள வழியில்லை. ஆகவே, மையிட்டு மறைக்காமல் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : செய்திகளே மறைப்பது பற்றி சில தெளிவான ஏற்பாடுகளே வைத்திருக்கிறோம். அரசியல் கைதிகளுக்கு சில செய்திகள் மறைக்கப்பட வேண்டியிருக்கிறது. குற்றம், கலகம் இது போன்ற தவறான முறையில் கவனம் செல்லக் கூடிய கருத்துக்கள் இருந்தால் அதை மறைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.

திரு. கோவை. செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட மாதிரி அரசியல் கருத்துகள், நல்ல உயர்ந்த வெளிநாட்டு சம்பந்தமான பத்திரிகைகள், பொருளாதார சம்பந்தமான பத்திரிகைகள் படிப்பது கைதிகளுடைய அறிவை விருத்திச் செய்யும். அந்த மாதிரி உள்ள பத்திரிகைகள் எதிர்க்கட்சியிலும் நடத்துகிறார்கள். நல்ல அரசியல்

1975 எப்ரல் 10]

கருத்துக்கள் சொல்கிற எதிர்க்கட்சி பத்திரிகைகளையும் அனுமதிக்க வேண்டும். சில பால் பண்பு ஊட்டுகின்ற பத்திரிகைகள் ஜெயில் கைதிகளுக்கு அனுமதித்தால் மிகவும் சிரமப்படுவார்கள். குடும்பம் இல்லாமல் தனியாக இருக்கிறார்கள். இத்தகைய பத்திரிகைகள் தடை செய்யப்படுமா? அரசியல் கருத்துக்கள் உள்ள பத்திரிகைகள் அனுமதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசியல் கருத்துக்களைத் தடுக்கக் கூடாது. அரசியல் கருத்துக்கள் சம்பந்தப்பட்ட பத்திரிகைகளை வாங்க விரும்பினால் சொந்த செலவில் அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்று ஏற்கனவே சொல்லி விட்டேன். வேறு பத்திரிகைகளைப்பற்றிச் சொன்னார்கள். அதிலே அதிக விவரம் தெரியாது. நிச்சயம் அப்படிப்பட்ட நிலை சிறையில் இருப்பதாகத் தெரியவில்லை.

தமிழில் எழுதப்பட்ட பட்டைகள்.

***623** வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பரா :

மாவட்ட நீதிமன்றங்களில் உள்ள (பியூன்) ஊழியர்கள் அணிந்திருக்கிற பட்டைகளில் உள்ள வார்த்தைகள் ஆங்கிலத்தில் சொல்லப்பட்டு எழுத்து வடிவில் தமிழில் உள்ளவற்றை மாற்றி தூய தமிழில் எழுதும் செயற்குறிப்பு அரசு பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ்நாடு அரசின் கடைநிலை ஊழியர்களுக்குத் தமிழில் எழுதப்பட்ட பட்டைகள் வழங்கிட அரசு ஆணை பிறப்பித்து விட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி : கோர்ட்டிலே, பொதுவாக ஆபீசிலே பியூன்கள் டவாலி போட்டுக் கொள்கிறார்கள். பழைய பிரிட்டிஷ் காலத்தில் இருந்த வழக்கத்தை மாற்றி அவர்களுக்கு புது தமிழில் எழுதப்பட்ட பட்டைகள் வழங்க குறிப்பு ஏதாவது உண்டா அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உயர்நீதி மன்றத்துக்கு கருத்துக்களை அனுப்பினால் அவர்கள் பரிந்துரையைக் கேட்டு, அப்படிப்பட்ட கோரிக்கை கவனிக்க செய்யலாம்.

Meeting of Southern Regional Electricity Board.

***531** Q.—Thiru N.K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state :—

(*a*) whether a meeting of the Southern Regional Electricity Board was held in Bangalore on 21st June 1974 ;